**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2022**

# P102 உரைநடையும் நாடகமும்

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சிலப்பதிகாரம் முழுமைக்கும் உரை எழுதியவர் யார்?
2. கவலைக்கு மருந்தாகப் பாரதியார் எதைக் குறிப்பிடுகிறார்?
3. தமிழ் மறுமலர்ச்சியின் தாயும் தந்தையுமாகத் திகழ்ந்தவர்கள் யாவர்?
4. "கற்பகத்தை இழந்தோம்" என்னும் தலைப்பில் திரு.வி.க. யாருடைய மறைவு குறித்து எழுதியுள்ளார்?
5. இரா.பி. சேதுப்பிள்ளை பணியாற்றிய இரு பல்கலைக்கழகங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
6. அண்ணாவின் மேடைத் தமிழ் எத்தகையது?
7. பாவாணர் உரைநடையின் உயிர்க்கருத்து யாது?
8. கண்ணதாசனின் இயற்பெயர் என்ன?
9. பொம்மலாட்டத்தின் இன்னொரு பெயர் என்ன?
10. பெண்கள் உருவாக்கி நடத்தி வந்த நாடக சபைகள் எத்தனை?
11. வள்ளி திருமணம் நாடகத்தில் வள்ளி பறவைகளை ஏன் விரட்டுகிறாள்?
12. ஆந்திர நாடக உலகத்தின் பிதாமகன் யார்?

13. வள்ளலார் வரலாற்றை நாடகமாக ஆக்கியவர் யார்?
14. கூத்துக் கதையுடன் தொடர்பில்லாமல் கூத்து முழுக்க வரும் பாத்திரம் யார்?
15. படித்த பெண்கள் நாடகத்தின் ஆசிரியர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. விளக்க உரைநடையின் அடியிழையாக இருப்பது எது?
2. உ.வே.சா வின் உரைநடை எவ்வாறு அமைந்துள்ளது?
3. மொழிக்கலப்பு என்றால் என்ன?
4. மு.வ.வின் உரைநடை எளிமையானது என்பதற்கு ஓர் எடுத்துகாட்டுத் தருக.
5. மனோன்மணீய நாடகத்தின் சிறப்புகளை எழுதுக.
6. கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், சங்கரதாஸ் சுவாமிகளை எவ்வாறு புகழ்ந்தார்?
7. எவற்றை அடிப்படையாகக் கொண்டு மூவேந்தர்கள் பற்றிய நாடகங்கள் அமைத்தனர்?
8. வானொலி நாடகக் கூறுகளின் பெயர்களைச் சுட்டுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பிற்கால உரைநடை குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) நாடக உரைநடை குறித்து கட்டுரை தருக.

2. (அ) அண்ணாவின் உரைநடையின் தனித்தன்மையை ஆராய்க.

(அல்லது)

(ஆ) பாவாணரின் தனித்தமிழ் நடையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

3. (அ) பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகங்கள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) கோயில்களில் கூத்து நிகழ்த்தும் முறைகள் குறித்து எழுதுக.

❋ ❋ ❋